DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,
PUDUKKOTTAI.
**SC.No. 56/2020**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of witness for | | P.W.6 | Caste | : | |
| Name | | ரெங்கசாமி | Age | | |
| Father Name | : | லெட்சுமணன் | | | |
| Village | | | | | |
| Taluk | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X 1873, on the day of 23.11.2022

**முதல் விசாரணை:—**

21.09.2019 அன்று மாலை 4.30 மணிக்கு ஆறுமுகம் மகன் நீலகண்ட மூர்த்தி என்பவர் பாண்டிச்செல்வத்தை அடித்து போட்டு விட்டார்., நாங்கள் பாண்டிச்செல்வத்தின் மனைவி தேவியை பார்ப்பதற்காக காத்தான் விடுதி கிராமத்திற்கு நானும் சிங்காரவேலுவும் சென்றோம். ஆலங்குடி ஸ்டேசனில் இருந்து வந்து போலிசார் வந்திருந்தார்கள். இந்த இடத்தை நாங்கள் ஆய்வு செய்வதற்காக நீங்கள் சாட்சியாக இருக்கிறீர்களா என்று கேட்டார்கள், நாங்களும் சாட்சியாக இருக்கிறோம் என்று சொன்னோம். சம்பவ இடம் குறித்து படம் வரைந்து எழுதி கொண்டார்கள். அப்போது அவர்கள் வரைந்த வரைபடம், எழுதிய ஆவணத்தில் கையொப்பம் போட சொன்னார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடைய கையொப்பம் தான் என்று சாட்சியம் அளிக்கிறார். அதன்படி பார்வை மகஜர் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் விசாரணையில் நான் சம்பவம் குறித்து கேள்விப்பட்டதாக தான் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். நான் பாண்டிச் செல்வத்திற்கு உறவினர் என்றால் சரிதான். சம்பவம் நடந்து 7 நாட்கள் கழித்து நான் சம்பவ இடத்தில் வைத்து தான் பார்வை மகஜரில் கையொப்பம் செய்தேன். பார்வை மகஜரில் கண்டுள்ள சங்கதிகளை போலிசார் எழுதி கொண்டு என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான். வரைபடத்தில்

நான் கையொப்பம் போட்டேன். சம்பவ இடம் எது என்று எனக்கு ஏற்கனவே நன்கு பரிட்சயம் தான் என்றால் சாட்சி சம்பவம் நடந்ததாக சொல்லப்பட்ட தேதியில் இருந்து 7 நாட்கள் கழித்து தான் சம்பவம் அந்த இடத்தில் நடந்ததாக நான் தெரிந்து கொண்டேன் என்று சாட்சி தெரிந்து கொண்டேன். சம்பவத்திற்கு முன்பாக சம்பவஇடத்தை நான் பார்த்திருக்கிறேன், பரிட்சயம் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகாமையில் வீடுகள் இருக்கிறது என்றால் சரிதான். என்னுடன் கையொப்பம் செய்துள்ள சிங்காரவேலு அம்புக்கோவில் கிராமத்தினை சார்ந்தவர் ஆவார், அவரும் பாண்டிச்செல்வம் வீட்டிற்கு சொந்தக்காரர் என்றால் சரிதான். வரைபடத்தில் வடக்கிலும் தெற்கிலும் என்ன விபரங்கள் கண்டுள்ளது என்று எனக்கு தெரியும். எனக்கு மேற்படி விபரங்கள் தெரியாது என்றாலும் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபட விபரங்கள் எதுவுமே எனக்கு தெரியாது என்றாலும் பாண்டிச்செல்வம் எனக்கு உறவினர் என்பதால் போலிசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

*Taken down by me in open court*
*read over to the witnesses and*
*admitted by him/her to be correct.*

*Sessions Judge,*
*Additional District Court,*
*Pudukkottai.*